தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 16.09.2019**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 4445/D/2019**

திரு C. வசந்த் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர், .. பொது அதிகார அமைப்பு
மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம்,
ஆவடி, சென்னை - 600 071.

****

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (16.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு C. வசந்த் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன் கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலருக்கு பதிலாக ஒப்புதல் பெற்ற திருமதி எல். சுதா, மாவட்டக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம், ஆவடி, சென்னை இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் 22.02.2019 தேதியிட்டு திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், 2018-2019 கல்வியாண்டில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009-ன் பிரிவு 12(1)(C)-ன் அடிப்படையில் திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூரில் உள்ள ஏழு பள்ளிகளைக் குறிப்பிட்டு, அப்பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள், கட்டாய கல்வி உரிமைச் சட்டப்படி விண்ணப்பித்த மொத்த மாணவர்கள் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 4 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலரால் 06.03.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரரின் மனு

ஆவடி, மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு மாற்றப்பட்டுள்ளது. தனக்கு தகவல் ஏதும் வழங்கப்படாத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் 26.04.2019 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவை திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலக முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். அதன் பின்பும், தனக்கு தகவல் ஏதும் வழங்கப்படாத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான 15.05.2019 தேதியிட்ட தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்து, தான் கோரிய தகவல்களை முழுமையாக பெற்றுத் தருமாறு கோரியுள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இவ்வாணையத்தால் இன்று (16.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆவடி, மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு பதிலாக ஆஜரானவர் 05.08.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் தாக்கல் செய்தார். மனுதாரர் இன்றைய விசாரணைக்கு நேரடியாக ஆஜராகியோ, கடிதம் வாயிலாகவே தமது தரப்பை எடுத்துரைக்கத் தவறியுள்ளார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரருக்கு பொது அதிகார அமைப்பினால் தற்போது 05.08.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டிருப்பினும், காலதாமதமாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பது தெளிவாகிறது. எனவே, இனிவருங்காலங்களில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களுக்கு காலதாமதாக பதில் அளிப்பதை தவிர்க்க பொதுத் தகவல் அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்.**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4445/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகம்,
ஆவடி, சென்னை - 600 071.

**<u>மனுதாரர்:-</u>**

திரு C. வசந்த், த/பெ. சந்திரன்,
நெ.11, மேட்டுத் தெரு, பெரியகாலனி,
திருநின்றவூர் - 602 024. திருவள்ளூர் மாவட்டம்.

Copy to: File / Stock file
KVPS 20.09.2019